**இனிமையான குழந்தைகளே! இப்போது கலியுகத்தின் இரவு முடிந்து கொண்டு இருக்கிறது. புதுயுகமாக மாற்றுவதற்கு தந்தை வந்திருக்கின்றார். அதனால் பாபாவின் நினைவினால் தன்னுடைய விகர்மங்களை அழியுங்கள்.**

கேள்வி: எந்த குழந்தைகளின் புத்தி சதோபிரதானமாக மாறுகிறதோ அவர்களின் அடையாளம் என்ன?

பதில்: அவர்களுக்கு மற்றவர்களை தனக்குச் சமமாக மாற்றக்கூடிய எண்ணம் வந்து கொண்டே யிருக்கும். அவர்கள் தனக்கும் மற்றவர்களுக்கும் நன்மை செய்வதற்கான யுக்திகளை உருவாக்கிக் கொண்டு இருப்பார்கள்.

கேள்வி: குழந்தைகளாகிய உங்களுக்கு மிகப் பெரியதிலும் பெரிய வேலை என்ன கிடைத்திருக்கிறது?

பதில்: முழு உலகத்திற்கும் பாபாவின் அறிமுகத்தைக் கொடுக்கக் கூடிய செயல் மிகப் பெரியது. எந்த ஒரு ஆத்மாவும் பாபாவின் அறிமுகம் இல்லாமல் இருந்துவிடக் கூடாது. இரவும் பகலும் எப்படி, யாருக்கு புரிய வைப்பது, சங்கொலி எழுப்புவது என்ற சிந்தனை செய்து கொண்டேயிருக்க வேண்டும்.

பாடல்: விழித்தெழுங்கள் மணப்பெண்களே விழித்தெழுங்கள்.....

ஓம் சாந்தி. யார் எழுப்பியது? மணப்பெண்களே என்று சொல்லக்கூடியவர் யார்? அவ்வாறு கூறக் கூடியவர் எல்லையற்ற தந்தை ஒருவரே. அவருடைய உண்மையான பெயர் சிவன் என்று குழந்தைகள் புரிந்து கொள்கிறார்கள். மற்றபடி என்னவெல்லாம் அனேகப் பெயர்கள் வைத்திருக் கின்றனரோ, அவை அனைத்தும் பக்தி மார்க்கத்தினுடைய தாகும். ஜெயந்தி கூட கொண்டாடு கிறார்கள் அது பரமாத்ம ஜெயந்தி ஆகிவிட்டது. நிராகார் சிவஜெயந்தி எனவும் பாடுகிறார்கள். ஆத்மாவிற்கு சரீரம் கிடைக்கும் பொழுது அந்த சரீரத்திற்கு பெயர் வைக்கப்படுகிறது. சிவன் என்பது ஆத்மாவின் பெயராகும். அவருக்கு சுப்ரீம் சோல் என்று கூறப்படுகிறது. சோலின் பெயர் என்ன? சிவன் என்ற பெயர் பாடப் பட்டு இருக்கின்றது. சிவஜெயந்தி என்றும் பாடப்படுகிறது. ஆத்மாவின் ஜெயந்தி என்று கூறமாட்டார்கள். கீதையின் பகவான் சிவன் நிராகாரர் ஆவார். ஸ்ரீ கிருஷ்ணர் என்பது தேகத்தின் பெயராகும், தேகதாரி அல்லவா! சிவபாபா தான் வந்து மணப் பெண்களை எழுப்புகிறார். அவருடைய அறிமுகத்தையும் அளிக்கிறார். நான் புதிய உலகத்தை உருவாக்கு வதற்காக வந்திருக்கிறேன். இப்பொழுது என்னை மட்டும் நினையுங்கள். மாயாவை வெற்றி அடைய வேண்டும். பாபாவிற்கு பதீத பாவனர் என்றும் கூறுகின்றார்கள். தூய்மையாக இருந்த தேவதைகள் இப்போது பதீதமாகியிருக்கிறார்கள். இப்பொழுது அனைவரும் பதீத பாவனா வாருங்கள், வந்து எங்களை விடுவியுங்கள் என அழைக்கிறார்கள். யாரிடமிருந்து? மாயா இராவணன் அல்லது சைத்தானிடமிருந்து. இப்பொழுது செல்ல வேண்டும் என்பதும் மனிதர்களின் புத்தியில் இல்லை. புதுயுகம், சத்யுகம் இப்பொழுது வந்தே விட்டது. பாட்டில் கூட புது யுகம், அது தூய்மையான யுகம் என்று கூறுகிறர்கள். பதீதர்களை பாவனமாக மாற்றுவதற்காக தந்தை வந்திருக்கிறார். புது உலகத்தை புதுயுகம் அல்லது சத்யுகம் என்று கூறப்படுகிறது. இது கலியுகம் பழைய உலகம் ஆகும். அனைவரும் கும்பகர்ண தூக்கத்தில் தூங்கிக் கொண்டு இருக்கின்றார்கள்.

அவர்களை வந்து எழுப்புகிறார். மாயை அறியாமை இருளின் இரவில் அனைவரையும் தூங்க வைத்து விட்டது. இப்பொழுது பாபா குழந்தை களே! கும்ப கர்ண தூக்கத்தில் இருந்து எழுந்திருங் கள் என்று கூறுகிறார். இப்பொழுது இந்த பழைய உலகத்தின் முடிவாகும். மரணம் எதிரில் நிற்கிறது. இப்பொழுது இரவு முடியப் போகிறது. பகல் வரப்பேகிறது. ஆகவே நீங்கள் விழித் தெழுங்கள். பாபா வந்துவிட்டார் என நீங்கள் புரிந்து கொள்கிறீர்கள். நாம் கூட காரிருளில் தூங்கிக் கொண்டு இருந்தோம். இப்போது இரவை பகலாக்குவதற்காக பாபா வந்திருக்கிறார். நாம் உங்களுக்காக பகல் அதாவது புதுயுகத்தை உருவாக்க வந்திருக்கிறேன் என பாபா கூறுகின்றார். இப்போது என்னை நினைத்தால் உங்களுடைய விகர்மங்கள் அழியும்.

ஏனென்றால் அனைவரும் பதீதமாக இருக்கின்றார்கள். அனைவரும் இந்த இராவணனிடமிருந்து விடுவியுங்கள் என்று கூறுகிறார்கள். இந்த சைத்தானின் இராஜ்யம் எப்போதிலிருந்து ஆரம்ப மானது என்று யாரும் புரிந்து கொள்ளவில்லை. பாபா வந்து இராவணனின் கவர்ச்சியில் இருந்து விடுவிக்கிறார். எப்படி? இதை பாபாவே வரும் பொழுது தான் கூறுகின்றார். அப்போது தான் அனுபவத்துடன் நாம் யாருக்கு வேண்டுமானாலும் புரிய வைக்கலாம். அனைவரும் கீழே இறங்கி இறங்கி பதீதமாக வேண்டும். பதீத பாவனனாகிய நான் சங்கமத்தில் தான் வரவேண்டும். உலகத்தில் இருக்கக்கூடிய மனிதர்கள் காரிருளில் இருக்கிறார்கள். கலியுகத்தின் ஆயுள் இலட்சக் கணக்கான வருடங்கள் என நினைக்கிறார்கள். ஏனென்றால் சாஸ்திரங்களில் தலை கீழாக எழுதி விட்டனர். இப்பொழுது தெய்வீக யுகம் உருவாகிக் கொண்டு இருக்கின்றது. நரகத்தை சொர்க்கமாக மாற்றுவதற்காக தந்தை வந்திருக்கிறார். தந்தை ஒருபோதும் நரகத்தை படைக்க மாட்டார். பாபா நமக்கு படிப்பிக்கின்றார் என்ற உறுதியான நிச்சயம் குழந்தைகளாகிய உங்களுக்கு இருக்கின்றது. நீண்ட காலமாக நம்மை படிப்பித்துக் கொண்டு இருக்கிறார்.

இப்போது திரிமுர்த்தி சிவஜெயந்தி வரப்போகிறது. சிவஜெயந்தியிலிருந்து கீதா ஜெயந்தி என்று எழுத வேண்டும். ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி கொண்டாடும் போது கீதா ஜெயந்தி கொண்டாடு வதில்லை. அவர் பெரியவராகும் போது தான் கீதையை கூறுவார். திரிமூர்த்தி சிவஜெயந்தி என்றால் கீதையின் ஜெயந்தியாகும். இது மிகவும் புரிந்து கொள்ள வேண்டிய விஷயம் ஆகும். அவர்கள் கீதையின் ஜெயந்தியை பிரித்து விடுகிறார்கள். ஏனென்றால் கிருஷ்ணர் சிறிய குழந்தை யாக இருக்கிறார். அவர் எப்படி கீதையை கூறுவார் என நினைக் கிறார்கள். வழக்கறிஞரின் பள்ளிக் கூடத்தில் அமர்ந்தால் வழக்கறிஞராவதற்காக படிக் கிறார்கள். அதில் நான் வழக்கறிஞராகுவேன் என்று குறிக்கோள் இருக்கின்றது. அதில் உயர்ந்த பதவியைப் பெற வேண்டும் என்பது படிப்பின் ஆதாரத்தில் இருக்கின்றது. சிலர் நன்கு படிக்கிறார்கள் என்றால் உயர்ந்த பதவி அடைகிறார்கள். படிக்கவில்லை என்றால் பதவி குறைகிறது. அனைத்திற்கும் ஆதாரம் படிப்பாகும். நீங்கள் இங்கே மனிதனிலிருந்து தேவதையாகுவதற்காக வந்துள்ளீர்கள். ஆனால் தேவதைகளில் கூட பதவி யானது வரிசைக்கிரமத்தில் இருக்கிறது. சிலர் முதல் வகுப்பு, சிலர் இரண்டாவது வகுப்பு, சிலர் மூன்றாவது வகுப்பு. இது அனைத்தும் குப்த விஷயங்கள் ஆகும். யாருடைய புத்தியிலும் புரிவதில்லை. நாம் நமது

இராஜ்யத்தை எப்படி உருவாக்கிக் கொண்டு இருக்கின்றோம். மகாபாரதப் போர் நடக்கப்போகின்றது. ஆனால் பாண்டவ சம்பிரதாயத்தினரோ சண்டையிடுவதில்லை. அசுர மற்றும் கௌரவ சம்பிரதாயத்தினர் தங்களுக்குள் சண்டையிட்டு அழித்துக் கொள்கிறார்கள். எனவே இப்பொழுது குழந்தைகள் முயற்சி செய்ய வேண்டும். பாபா நேரத்திற்கு ஏற்றாற் போல வழிகாட்டிக் கொண்டு இருக்கின்றார் என்பதைப் புரிய வைக்க வேண்டும். நிராகார் பரம்பிதா பரமாத்மா எப்படி இராஜயோகத்தை கற்பிப்பார். நிச்சயமாக சரீரத்தில் வருவார். குழந்தைகளே! நீங்கள் நினைவு யத்திரையில் இருக்க வேண்டும், என்னை நினைவு செய்யுங்கள். இது யோக அக்னி. இதன் மூலம் விகர்மங்கள் அழிந்து போகும் என பாபா ஸ்ரீமத் கொடுத்துக் கொண்டு இருக்கின்றார். உங்களுக்கு ஒவ்வொரு நாளும் நல்ல நல்ல கருத்துக்கள் கிடைத்துக் கொண்டு இருக்கின்றது. பதீத பாவனரின் கருத்துகளும் நன்றாக இருக்கின்றது. பதீத பாவனர் தந்தையை அழைக்கிறார்கள். பிறகு கங்கையில் சென்று நீராடுகின்றார்கள். பதீத பாவனர் என்று பரம்பிதா பரமாத்மாவிற்குக் கூறப்படுகிறது என்று நீங்கள் எழுதலாம். அவரே ஞானக்கடல் ஆவார். முழு உலகத்தையும் தூய்மையாக மாற்றுகின்றார். முழு உலகத்திற்கும் கேள்வி இருக்கிறதல்லவா! உலகம் எப்படி தூய்மையாக மாறும்? கங்கை, யமுனை போன்ற நதிகள் இருந்து கொண்டு தான் இருக்கிறது. இப்பொழுது கலியுகத்தின் நேரம். சிறிது குழப்பங்கள் ஏற்படுகிறது. சத்யுகத்தில் அனைத்து நதிகளும் தனது இடத்தில் வந்து விடும். ஆனால் இதனால் யாரும் தூய்மையாக முடியாது. மிகவும் தெளிவாகப் புரிய வைக்க வேண்டும். நோட்டிஸ்களை வழங்க வேண்டும். அதுவும் கூட ஒவ்வொரு ஆளையும் பார்த்துக் கொடுக்க வேண்டும். முக்கியமாக இரண்டு மூன்று கருத்துக்களைப் புரிய வைக்க வேண்டும். உண்மையில் இச்சமயம் அனைவரும் பதீதமாக விகாரியாக இருக்கிறார்கள். அனைவருடைதும் இறங்கும் கலையாகும். குருநானக் கூட அழுக்கான துணிகளை...... என கூறியிருக்கிறார். பாரதத்தை தூய்மையாக மாற்ற வேண்டும். இவர்களை மிகக் கீழானவர்கள் என்றே கூறலாம். தேவதைகள் உயர்ந்தவர்கள் ஆவர். இச்சமயம் வேறு யாரும் மாற முடியாது. ஏனென்றால் மாயையின் இராஜ்யம் இருக் கிறதல்லவா. ஆம் மற்றபடி பக்தியில் சுகம் கிடைக்கிறது. இங்கே படைப்புகள் (குழந்தைகள்) கூட யோக பலத்தினால் உருவாகவில்லை. விகாரத்தினால் உருவாகின்றனர். முதலில் மிகச்சிலரே இருக்கிறார்கள். பிறகு விருத்தியடைவதால் தங்களுக்குள் சண்டையிடுகிறார்கள். ஒவ்வொருவரும் முதலில் சுகத்தை யும் பிறகு துக்கத்தையும் பார்க்க வேண்டும். இது மனிதர்களின் விஷயம் ஆகும். சத்யுகத்தில் மனிதர்கள் சுகமாக இருக்கிறார்கள் என்றால் விலங்குகளும் சுகமாக இருக்கிறது. இவ்வா றெல்லாம் எழுதுங்கள் என பாபா புரிய வைக்கிறார். திரிமூர்த்தி சிவஜெயந்தி என்றால் ஸ்ரீமத் பகவத் கீதையின் ஜெயந்தியாகும். பிறகு புரிய வைக்க வேண்டும். யார் புரிந்து கொள்கிறார்களோ அவர்களுக்கு இந்த விஷயங் களை மற்றவர்களுக்கு புரிய வைக்க வேண்டும் என்று தோன்று கிறது. புரிய வைக்காமல் எப்படி விருத்தியடையும்? நாடகத்தின் படி யாருக்கு புரிந்து கொள்ளும், புரிய வைக்கக் கூடிய நடிப்பு இருக்கிறதோ அவர்கள் அவர்களுடைய பாகத்தை நடிக்கிறார்கள். பக்தி யினுடைய பாகம் கூட ஒவ்வொரு நாளும் தீவிரமாகிறது. எப்பொழுது மூங்கில் காடு தீப்பற்றி எரிகிறதோ அப்போது கண்கள் திறக்கிறது. குழந்தைகளாகிய நீங்கள் சங்கொலி எழுப்ப வேண்டும். எப்படி யாருக்குப் புரிய வைப்பது என்ற சிந்தனை இரவும்

பகலும் இருந்து கொண்டே இருக்க வேண்டும். முழு உலகத்திற்கும் பாபாவின் அறிமுகத்தை கொடுக்க வேண்டும். இது எவ்வளவு பெரிய வேலை! உலகம் எவ்வளவு பெரியதாக இருக்கிறது. பல தர்மங்கள், பல கண்டங்கள் இருக்கிறது. சத்யுகத்தில் ஒரே ஒரு தர்மம் தான் இருக்கிறது பிறகு வளர்ச்சி அடைகிறது. பிரஜா பிதா பிரம்மா மூலமாகத்தான் பிராமணர் கள் உருவாகிறார்கள் என்று புரிந்து கொள்கிறீர்கள். பிராமண வர்ணத்தையும் காண்பிக்க வில்லை, உருவாக்கக்கூடியவரையும் காண்பிக்கவில்லை. எனவே கௌரவர்களையும், பாண்டவர்களையும் காண்பிக்கிறார்கள் என்பதைப் புரிய வைக்க வேண்டும். நீங்கள் பிராமணன். பிரஜா பிதா பிரம்மா குமாரர்கள், குமாரிகள் இருக்கிறார்கள் என்றால் நிச்சயமாக பிரஜா பிதா வேண்டும். அவர் மூலமாக விதவிதமான வம்சங்கள் உருவாகிறது. தேவதைகள், சத்திரியர்கள், வைசியர்கள், சூத்திரர்களை காண்பிக் கிறார்கள். மற்றபடி சங்கமயுக பிராமணர் களை மறைத்து விட்டனர். திரிமூர்த்தி பிரம்மா எனப் புகழ் பாடுகிறார்கள். ஆனால் திரிமூர்த்தி பிரம்மாவின் பொருளை அறியவில்லை. அவர்களுக்கு கொடுக்கக் கூடியவர் யார்? நிராகார் பாபா பிரம்மா மூலமாக அமர்ந்து புரிய வைக்கின்றார். பிரம்மாவின் கமல வாயின் மூலமாக குழந்தைகள் பிறக்கிறார்கள். உங்களுக்கு சொல்லிக் கொடுக்கும் போது தான் பிரம்மாவும் கேட்கிறார். நீங்கள் இல்லை என்றால் சிவபாபா என்ன செய்வார்? ஒருவருக்கு மட்டும் சொல்லப்படவில்லை. சாஸ்திரங்களில் ஒரு அர்சுனனின் பெயரை மட்டும் எழுதிவிட்டனர். எந்த நேரத்தில் எந்த கருத்து கிடைக்கின்றதோ அச்சமயம் அச்சேவையில் ஈடுபட வேண்டும். நீங்கள் ஒவ்வொரு விஷயத்தையும் மிகவும் தெளிவாகப் புரிய வைக்க வேண்டும். ஆனால் யோகத்தில் இருப்பது, தூய்மையாவது கடினமாகும். விகாரங்களை விடுதலில் எவ்வளவு கடின உழைப்பு இருக்கின்றது! விகாரத்திற்காகத் தான் சண்டைகள் ஏற்படுகின்றன. எனவே குழந்தைகள் சேவையில் கவனம் கொடுக்க வேண்டும். படித்து, படிக்க வைக்க வேண்டும். இச்சேவையில் தான் நன்மை இருக்கிறது. ஆர்வம் இருக்க வேண்டும். யார் புதியதாக வருகிறார்களோ அவர்களிடம் விண்ணப்பத்தில் நிரப்பச் செய்பவர் கள் மிகவும் புத்திசாலியாக இருக்க வேண்டும். விண்ணப்பங்களை நிரப்பும் பொழுது நீங்கள் சாதனை செய்கிறீர்களா, முக்தி தாமம் போக விரும்புகிறீர்களா என்று கேளுங்கள். முக்தி தாமத்தின் அதிபதி ஒரே ஒரு பரம்பிதா பரமாத்மா ஆவார். அந்த தந்தையே வந்து தூய்மையாக்குகிறார். இந்த நீராடுதல் போன்றவை களை பாரதத்தில் தான் செய்கிறார்கள் வேறு தர்மத்தில் செய்வதில்லை. அவர்கள் தங்களுடைய தர்ம ஸ்தாபனையாளர்களுக்கு முன்பு தலை வணங்குகிறார்கள், மலர்களை அர்ப்பணிக்கிறார்கள், மகிமை பாடுகிறார்கள். அவர்களுக்கு பதீத பாவனர் பாபா ஒருவர் தான் என்பது தெரியாது. இப்பொழுது கிறிஸ்மஸில் கிறிஸ்துவை எவ்வளவு போற்றுகிறார்கள்! இருப்பினும் காட் ஃபாதரை (இறை தந்தை) நினைக்கிறார்கள். ஓ காட் பாதர் என்கிறார்கள். அவரை அழைக்கிறார்கள். அவர் களுக்கு கூட (கிறிஸ்துவர்களுக்கு கூட) இந்த ஞானம் கிடைக்கும். சித்திரங்களை உருவாக் கினால் வெளி நாடுகளுக்கு அனுப்பலாம் என பாபா கூறுகிறார். எல்லையற்ற சிருஷ்டியின் நன்மைக்காக புத்தி செயல்பட வேண்டும். பாபாவின் புத்தி இதைப் பற்றி சிந்தித்துக் கொண்டு இருக்கின்றது. இந்தச் சித்திரங்களின் மீதான மதிப்பு மிகச் சிலருக்குத் தான் இருக்கின்றது. பாபா தெய்வீக திருஷ்டி மூலமாக இதை உருவாக்கியிருக்கிறார். எவ்வளவு மதிப்பு இருக்க வேண்டும்! இதன் மூலமாக எவ்வளவு மிகப்பெரிய முதல் தரமான சேவை கள் நடக்கிறது! நாடகத்தின் படி யாராவது வந்தால் இந்த சித்திரங்களை

உருவாக்குவார்கள். இன்னும் போகப் போக இப்படி புத்திசாலிக் குழந்தைகள் வருவார்கள். அவர்கள் சேவையில் புதுப்புது கண்டுபிடிப் புகளை கண்டு பிடிப்பார்கள். அதைப்பார்த்ததும் மனம் மகிழ்ச்சி யடைந்து விடும். ஆங்கிலம் அனைத்து இடங் களிலும் பரவி இருக்கின்றது. மொழிகள் எவ்வளவு இருக்கிறது. அனைத்து தேசங்களிலும் ஆங்கிலேயர்கள் கண்டிப்பாக இருப்பார் கள். ஆகவே தான் பாபாவும் ஆங்கிலம் மற்றும் இந்தியை எடுத்திருக்கிறார். கடைசியில் அனைத்து மொழிகளிலும் வெளிவரும். யாருக்கு வேண்டுமானாலும் புரிய வைப்பது எளிதாகும். ஆனால் யாருடைய புத்தியில் இல்லையோ அவர்கள் என்ன செய்வார்கள் என பார்க்கிறோம். செல்வம் இருக்கிறது தானம் செய்யவில்லை என்றால் அவர்களுக்கு கஞ்சன் என்று கூறப்படுகிறது. ஒரு காதில் கேட்கிறார்கள் இன்னொன்றின் வழியாக விட்டு விடுகிறார்கள். ஒவ்வொருவருக்கும் தனது முன்னேற்றத்தைப் பற்றிய எண்ணம் நிச்சயம் இருக்க வேண்டும். தொடர்பின் பாதிப்பில் வரக் கூடாது. சேவையில் பிசியாக இருக்க வேண்டும். இல்லையென்றால் மிகப் பெரிய நஷ்டம் ஏற்பட்டு விடும். தனது முன்னேற்றத்திற்காக மிகவும் முயற்சி செய்ய வேண்டும். பாபா நான் சென்று பலரை தனக்கு சமமாக மாற்றக் கூடிய சேவை செய்கிறேன் என்ற எண்ணம் வரவேண்டும். அவர் களுக்குத் தான் சதோ பிரதான புத்தி என்று கூறப்படுகிறது. தமோபிரதானமான புத்தி உடையவர்கள் தன்னைப் பற்றியும், மற்றவர்களைப் பற்றியும் சிந்திக்க மாட்டார்கள். அவர் களுக்கு முட்டாள் என்று கூறப்படுகிறது. சதோபிரதானமான புத்தி உடையவர்கள் புத்திசாலி கள் ஆவர். கணக்கு வழக்கு கூட சிலருக்கு மிகக் கடினமாக இருக்கிறது. புரிந்து கொண்டாலும் மாட்டிக் கொண்டிருக்கிறார்கள். இச்சமயம் இரவும் பகலும் சேவையில் ஈடுபட்டு இருக்க வேண்டும். தனக்கு வருமானம் இருக்கிறது. தந்தையாகிய என்னிட மிருந்து ஆஸ்தி அடைய வேண்டும். இல்லையென்றால் கல்ப கல்பத்திற்கும் நஷ்டம் ஏற்பட்டு விடும். முதலில் தனக்கு நன்மை செய்து கொள்ள வேண்டும். அப்போது தான் மற்றவர்களுக்கும் செய்ய முடியும்.நல்லது.

இனிமையிலும் இனிமையான காணாமல் போய் கண்டெடுக்கப்பட்ட செல்லமான குழந்தைகளுக்கு தாயும் தந்தையுமாகிய பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கம். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்தே.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1. ஞான செல்வத்தை தானம் செய்வதில் கஞ்சனாக இருக்கக் கூடாது. தன்னுடைய மற்றும் மற்றவர்களுடைய முன்னேற்றத்திற்காக யுக்திகளைக் கண்டுபிடிக்க வேண்டும்.

2. மனிதனிலிருந்து தேவதையாகும் படிப்பை படிக்கவும் படிப்பிக்கவும் வேண்டும். சேவை மற்றும் படிப்பின் மீது முழு கவனம் கொடுக்க வேண்டும். கடுமையான கணக்கு வழக்கினை யோக பலத்தினால் முடிக்க வேண்டும்.

வரதானம் : நினைவு மற்றும் சேவையின் மூலம் தன்னுடைய பாக்கியத்தின் ரேகையை உயர்ந்ததிலும் உயர்ந்ததாக ஆக்கக்கூடிய பாக்கியவான் ஆகுக.

பிராமணர்களின் ஜாதகத்தில் மூன்று காலங்களும் நல்லதிலும் நல்லதாக உள்ளது. எது நடந்ததோ, அதுவும் நல்லது மற்றும் எது நடந்து கொண்டு இருக்கிறதோ, அது இன்னும் நல்லது, மேலும், எது

நடக்கப் போகிறதோ, அது மிக மிக நல்லது. அனை வருடைய நெற்றியில் சிரேஷ்ட அதிர்ஷ்டத்தின் ரேகை வரையப்பட்டுள்ளது, நினைவு மற்றும் சேவையில் மட்டும் சதா பிஸியாக இருங்கள். எவ்வாறு சரீரத்தில் சுவாசம் இயற்கை யாக உள்ளதோ, அதுபோல் இவை இரண்டும் இயற்கையானதாக இருக்க வேண்டும். யார் எந்தளவு விரும்புகிறார்களோ, அந்தளவு தனது சிரேஷ்ட பாக்கியத்தை உருவாக்க முடியுமளவு பாக்கியவிதாதா பாபா, நினைவு மற்றும் சேவை யினுடைய விதியைக் கொடுத்துள்ளார்.

சுலோகன்: திருப்தி என்ற சீட்டில் (இருக்கையில்) அமர்ந்து சூழ்நிலைகளின் விளையாட்டை சாட்சியாகப் பார்ப்பதுவே திருப்திமணி ஆகுவதாகும்.